# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் ௪௬ | திருவள்ளுவர் ஆண்டு ௨௲௩<br>பரிதாபி, மார்கழி<br>( 1972 — திசம்பர் — 1973 — சனவரி ) | மலர் ௬ |
|---|---|---|


( சென்ற இதழின் தொடர்ச்சி )

## சொல்லிசையளபெடை II

திரு. அ. தட்சிணாமூர்த்தி, பி. ஏ (ஆனர்சு) பி. ஈடி.
அ. வீ. வா. நி. திருபுட்பம் கல்லூரி, பூண்டி.

**இகர ஈற்று வினைகள் :**

இகர ஈற்றில் முடியும் வினைப்பகுதிகள் எச்சமாகும்பொழுது 'உகர' விகுதியே பெறுவது இயல்பு: (தெரி — தெரிந்து, விரி — விரிந்து). அகநானூற்றில் விரீஇ. கறீஇ, அறீஇ, கழீஇ. என்னும் வடிவங்கள் எச்சங்களாக வருகின்றன. இவை எவ்வகை விகுதியும் பெறாமலேயே அளபெடுப்பதனால் எச்சப் பொருள் தருகின்றன. விரி, கறி, அறி, கழி என்பன வினைச் சொற்களே. இங்கு வினைமுற்று அளபெடுத்து வினையெச்சப் பொருள் தருகின்றது

**அகர ஈறு ஐகார ஈறாகத் திரியும் வினைகள் :**

கவைஇ, கடைஇ, துழைஇ, தடைஇ, வினைஇ என்னும் வடிவங்களில் இயல்பான சொற்கள் கவ. கட, துழ தட வின என்பனவாகும். இவை ஐகார ஈறாகத் திரிந்து அளபெடுத்து வினையெச்சப்பொருள் தந்தன எனலாம். ஈண்டும் வினைச் சொல்லே அளபெடுத்து எச்சப் பொருள் தந்தது.

**வினையாகவிருந்து பெயராகவும் அமையும் ஐகார ஈற்றுச் சொற்கள் :**

புகைஇ, அசைஇ, நசைஇ, பசைஇ என்ற சொற்கள் அடிப்படையில் வினைச் சொற்கள் என்பது முன்பே சொல்லப்பட்டது.

இவை நெடிலீறுகள் எனவே இயல்பாகவே நின்று அள பெடுத்து எச்சப்பொருள் தந்தன வெனவேண்டும். ஈண்டும் வினைச் சொல்லே அளபெடுத்து எச்சப்பொருள் தருகிறது ஆறுமுகநாவலர் நசை என்பதனைப் பெயராகவே கொண்ட தால் அவ்வாறு இலக்கணம் கூறினர். இது சிறுபான்மை யென்று அவர் கருதினர் போலும். நசை வினையாகவே வரு வதும் முன்பே கூறப்பட்டது. எனவே ஏவல் வினைமுற்று அளபெடுப் பதன் மூலம் எச்சப் பொருள் தருவது சொல்லிசையளபெடை யென்றல் பொருந்தும். இகரம் வினையெச்ச விகுதியாகவும் வருவதால் இவ்வளபெடை வடிவம் இயற்கையாக இருக்கிறது என்றும் 'இ' கர விகுதி தனி நிலையில் இடப்பட்டது போலத் தோன்று கிறது என்றும் கூறத் தோன்றுகிறது.

இங்கு கூறப்பட்ட நான்கு வகையான சொற்களில் முற்றுகர ஈற்றுச் சொற்கள் இகர விகுதிபுணர்ந்து அளபெடுத்தவை என்றும், ஏனைய மூன்றும் விகுதியோடு புணராது அளபெடுத்து வினையெச்சமாயின என்றும் வேறுபாடு காணவேண்டும். எனவே சொல்லிசையெனக் கூறவேண்டுவது ஏவல் வினைப் பகுதி அளபெடுத்து எச்சப் பொருள் தருவதே.

**மரீஇப் பின்னைப் பிரிவு :**

உயிரெழுத்து இரண்டுமுறை அளபெடுப்பதற்கு நாலடி யாரில் நட்பாராய்தல் அதிகாரத்தின் இறுதிச் செய்யுளிலுள்ள மேற்கண்ட அடியினை நச்சினர்க்கினியர் எடுத்துக் காட்டியுள் ளார். மரு—என்ற வினை இகரத்தோடு புணர்ந்து மரி என் ருகிப் பின் நீண்டு மரீஇஇ என இரண்டு முறை அளபெடுத்த தாகக் கொள்ளவேண்டும். இவ்வகைச் சொற்கள் அளபெடைச் சொற்களே என்பதற்கு இதனை நல்ல சான்ருகக் கொள்ளல் தகும். ஆனல் முன் கூறியவாறு இது சொல்லிசையளபெடை யன்று.

**இயரீற்றுச் சொற்கள் :**

**செலீஇயர், உணீஇயர், படீஇயர்.** என்ற சொற்கள் இலக்கியங் களில் பயின்றுள்ளன. இவற்றின் இயல்பான ஈறு இயர் என்பதுவே. இவற்றை மேற்போக்காகக் காணும் பொழுது அளபெடை வடிவம் போலத் தோன்றுகின்றது. இவற்றையும்

தற்காலத்தவர் சொல்லிசையளபெடை யென்கின்றனர். அது பொருந்துவதாகத் தெரியவில்லை செல் + இயர் உண் + இயர் என்பனவற்றில் இயர் இயல்பு ஈருக நிற்க இதிலுள்ள இகரத்தின் ஆற்றலால் மெய்யீறு தனக்கு இனமான உயிரீருகத் திரிந்தது என்பதே பொருந்தும் இதனையும் அளபெடை யென்ருல் இயர் என்பதிலிருந்த 'இ' கரவுயிர் என்னவாயிற்று என்ற வினுவெழுமன்ருே! அது மறைந்தது என்ருல் செலீஇ என நின்று 'யர்' என்பதனேடு புணர்ந்தது எனல் வேண்டும் உண் + இயர் —> உண்ணியர் என்று இகர உயிர் இருந்தே புணர்வதனையும் காணலாம். எனவே உணீஇயர், செலீஇயர் என்பனவற்றில் இகரம் இயல்பான இகரமே. உணீஇய என்ற வடிவமும் உண்டு. இது உண்ணுதற்காக என்ற எதிர்காலம் உணர்த்தும் வினையெச்சமாகவுள்ளது. உண் + இய என்பதே சொல் இய என்ற விகுதியிலேயே எச்சப் பொருண்மையும் காலப் பொருண்மையும் அடங்கியுள்ளன. எனவே உண் என்பது உணீ என நீண்டு அளபெடுத்து எச்சப் பொருள் தந்தது என்று கொள்ளல் தகாது.

மேற்காட்டிய விளக்கத்தால் சொல்லிசையளபெடைக்கு நாவலரும் பிறரும் கொண்ட இலக்கணம் பொருந்தவில்லை யென்றும் வினைச்சொல் அளபெடுத்து வினையெச்சப் பொருள் தந்தது என்பது ஒருவகையில் பொருந்தும் என்பதும், தழீஇ, வெரீஇ முதலியவை சொல்லிசையெனக் கொள்ளத்தக்கன அல்ல வென்பதும் அவை எச்சமாகிப் பின் அளபெடுத்து ஈரசைச் சொற்களானவை என்றும் உணரலாம் இது முடிந்த முடிபன்று. அறிஞர்கள் தெளிவுறுத்துவார்களாக.

# உளப்பாட்டுத் தன்மைப் பன்மை

டாக்டர். மோ. இசரயேல்,
தமிழ்த்துறை, மதுரைப் பல்கலைக் கழகம்.

முகவுரை

தன்மைப் பன்மை இருவகைத்து; ஒன்று முன்னிலையாரை உளப்படுத்துவது; மற்றது முன்னிலையாரை உளப்படுத்தாதது. முன்னிலையை உளப்படுத்தும் தன்மைப் பன்மையை உளப்பாட்டுத் தன்மைப் பன்மை என்கிறோம். முன்னிலையை உளப்படுத்தாத தன்மைப் பன்மை படர்க்கையை உளப்படுத்தும் பன்மையாதலின் அதுவும் உளப்பாட்டுப் பன்மை ஆகாதோ வெனின், படர்க்கையினை உளப்படுத்தியே அது பன்மையாதலின் அதனை இயல்பாக அமைகின்ற தன்மைப் பன்மையாகக் கொண்டு அதனை விடுத்து, படர்க்கையோடு முன்னிலையையும் உளப்படுத்தும் தன்மையை மட்டும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை எனச் சிறப்பித்துச் சொல்லுதும்.

தொல்காப்பியமும் உரை நூற்களும்

தன்மை யொருமைக்கு 'யான்' என்ற ஒரு சொல்லைமட்டும் குறிப்பிட்ட தொல்காப்பியனார் தன்மைப் பன்மைக்கு அதற்கு ஒத்த 'யாம்' என்ற சொல்லைத் தருவதோடு அமையாது. 'நாம்' என்ற சொல்லையும் தந்துள்ளார். எனவே அவர் தரும் தன்மைப் பன்மைப் பெயர்கள் இரண்டு; யாம், நாம் என்பன. எனினும் அவர் இரண்டு சொற்களுக்கும் பொருள் வேறுபாடோ, இலக்கண வேறுபாடோ கூறவில்லை. ஆனால் ஒருமையில் 'யான்' மட்டும் கூறிப் பன்மையில் 'யாம்', 'நாம்' என்ற இரு சொற்களை அமைத்திருத்தலும் 'யாம்' என்ற சொல்லை அதனையொத்த ஒருமைச் சொல்லை அடுத்தே 'யான், யாம் நாமென வரூஉம் பெயரும்' என நூற்பாவில் (தொ சொ 165) அமைத்திருப்பதும் 'நாம்' சிறிதேனும் பொருள் வேறுபாடு உடையதாக இருக்கலாம் என்ற ஐயப்பாட்டிற்கு இடந்தருகின்றது. எனவே தான் நச்சினார்க்கினியர், கல்லாடனார் போன்ற தொல்காப்பிய உரையாசிரியர்கள் மேற் குறிப்பிட்ட நூற்பா அடிக்கு "'யான்' என்னும் தனித் தன்மைப் பெயர் ஒன்றும், 'யாம்' என்னும் படர்க்கை யுளப்பாட்டுத் தன்மைப் பெயர் ஒன்றும்," என்று உரை விளக்கம் தந்து 'நாம்' என்னும் சொல் முன்னிலையை உளப்படுத்தும் தன்மைப் பெயர் என்று

தெளிவாக்கி உள்ளனர் [1] எனவே 'யாம்,' 'நாம்' ஆகிய இருசொற்கள் தொடக்க நிலையிலேயே பொருள் வேறுபாட்டுடன் பயன் படுத்தப்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

மேலும் தொல்காப்பியனுர் தன்மைப் பன்மை விகுதிகளைத் தொகுத்துக் கூறும் நூற்பாவின் உரையில், இளம்பூரணர் "அம், ஆம் என்பன முன்னின்றுரை உளப்படுக்கும், தமராய வழிப் படர்க்கையாரையும் உளப்படுக்கும் எம், ஏம் என்பன படர்க்கையாரை உளப்படுக்கும்" என்றும், சேனுவரையர் "அம், ஆம் என்பன முன்னினருரை உளப்படுக்கும்; தமராய வழிப் படர்க்கையாரையும் உளப்படுக்கும்" என்றும் நச்சினுர்க்கினியர் "முன்னர் நின்ற நான்கும் இறந்த காலம் பற்றி வருங்கால், 'அம்' ,ஆம்' என்பன தன்னேடு முன்னின்ருரையும் தமராய வழிப் படர்க்கையாரையும் உளப்படுத்தும்" என்றும், கல்லாடனுர் "உளப்பாட்டுத் தன்மை முன் உணர்த்தத் தொடங்கினுர்" [2] என்றும் கூறினுர். முன் உணர்த்தப்படுவன 'அம்' 'ஆம்' என்பனவே. எனவே உரையாசிரியர்கள் கருத்துப்படி 'அம்' 'ஆம்' என்னும் வினை விகுதிகள் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை விகுதிகளாகும் எனவும் 'எம்' 'ஏம்' என்பன உளப்படுத்தாத் தன்மைப் பன்மை விகுதிகளாகும் எனவும் கருதலாம்

சங்க இலக்கியம்

பண்டைக் காலத் தமிழ் இலக்கியங்களில் கூட இவ்வேறுபாடு தெளிவாக அமையவில்லை முன்னர்ச் சொல்லப்பட்ட உரையாசிரியர் கருத்து 'நாம்' என்னும் பெயரே அம்' 'ஆம், விகுதிபெற்ற வினைமுற்றுக்களை ஏற்று வருவன என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. ஆனல் பின்வரும் எடுத்துக்காட்டுக்களில் 'யாம்' என்னும் பெயர் 'அம்', 'ஏம்' என்னும் இரு விகுதிகள் உடைய வினைகளையும் பயனிலைகளாகப் பெற்று வழங்குகின்றமையைக் காணலாம்

வந்தனம் யாம் (புறம் 10 · 13)
யாமே காண்குவம் (புறம் 40 · 6)
யாம் இலம் (புறம் 61 13)
பெரியம் யாம் (புறம் 78 5)
யாமும் பாரியும் உளமே (புறம் 88 2)
யாம் எந்தையும் இலமே (புறம் 112 · 2)
தொகுத்தனம் யாமே (புறம் 126 · 18)
யாம் அவன் இளைஞரேம் அல்லேம் (புறம் 144 10)

உடையம் யாம் ( திருக்குறள் 844 )
யாம் இன்னம் ( திருக் 790 )
யாம் உளேம் ( திருக். 1204 )
இருந்தேம் யாம் ( திருக். 1312 )

எனவே 'யாம்' என்னும் பெயர் 'அம்' என்னும் விகுதி பெற்ற வினைகளோடு அமைவதால் உரையாசிரியர் கொள்கை முற்றிலும் இயைபுடைத்தாகத் தோன்றவில்லை.

சங்க இலக்கியங்களில் 'யாம்' என்னும் பெயர்தான் மிகுதியாக வழங்குகின்றது. 'நாம்' மிகக் குறைவாகவே இடம் பெற்றுள்ளது. புறநானூற்றில் 'யாம்' முப்பத்தைந்து இடங்களிலும் 'நாம்' ஒரு இடத்திலும் காணப்படுகின்றன. திருக்குறளில் 'யாம்' பதினைந்து முறையும் நாம் ஒரு முறையும் அமைகின்றன. 'நாம்' என்னும் பன்மைப் பெயருக்கு இணையான 'நான்' என்னும் ஒருமைப் பெயர் சங்க இலக்கியத்தில் பரிபாடலில் மட்டும் இரண்டு இடங்களில் ( பரி 6·87., 20·82 ) காணப்படுகின்றது. சிலம்பிலும் மேகலையிலும் சில இடங்களில் காணப்படுகின்றது. ஆனால் அது எட்டாம் நூற்றாண்டு இலக்கியங்களில் மிகுதியாக ஆட்சி பெற்றுவிட்டது; திருவாசகத்தில் பெருவழக்காகி விட்டது.

பவணந்தி முனிவர் "தன்மை யான் நான், யம் நாம்" ( நன். 287 ) எனக் குறிப்பிட்டு 'நான்' என்ற சொல்லையும் தம் இலக்கண நூலில் அமைத்துவிட்டார். ஏனெனில் 'நான்' அவர் காலத்திற்கு முந்திய இலக்கியங்களில் பெருவழக்காகி விட்டது. மேலும் அவர்

அம் ஆம் என்பன முன்னிலை யாரையும்
எம் ஏம் ஓம் இவை படர்க்கை யாரையும்
உம் ஊர் கடதற இருபா லாரையும்
தன்னொடு படுக்குந் தன்மைப் பன்மை (நன் 332)

என்று கூறி வினை விகுதிகளையும் முன்னிலையை உளப்படுத்துவன. உளப்படுத்தாதனவாகப் பாகுபாடு செய்து காட்டுகின்றார். நச்சினார்க்கினியர். கல்லாடனார் போன்ற உரையாசிரியர்களும், பவணந்தி முனிவர் போன்ற இலக்கண நூலாரும் அவர்கள் காலத்திற்கு முன்போ, அன்றேல் அவர்கள் காலத்திலோ இவ்வாறு வரையறையான வேறுபாட்டோடு வழங்காத வினைவிகுதிகளை ஏன் பாகுபடுத்திக் காட்டினார்கள் என்பது

அறிந்துகொள்ள இயலாததாகவே உள்ளது இந்த விகுதிகள் இலக்கண மரபில் வேறுபடுத்தப்பட்ட வழக்கினைப் பெற்றுக் காலப் போக்கில் இலக்கிய வழக்கில் வேறுபாட்டை இழந்திருக்கலாமோ என்று கருத இடமுள்ளது.

**'நாம்' என்னும் பெயர்**

'நாம்' என்னும் சொல் தொன்று தொட்டு இன்றுவரை உளப்பாட்டுப் பன்மைப் பெயரேயாகும். அதன் உருபேற்கும் வடிவம் 'நம்' ஆகும். இதனோடு — கள் விகுதி இணைவதே இல்லை. உளப்படுத்தாப் பன்மை 'நாம்' வேறு அதனுடன் தான் பிற்காலத்தில் 'கள்' விகுதி இணைந்துள்ளது. இந்த 'நாம்' 'யாம்' என்ற சொல் திரிந்த வடிவம் ஆகும் என்பதில் தவறில்லை.

**யாம். யாங்கள், நாம், நாங்கள்**

உளப்பாட்டுத் தன்மைப் பெயர் 'யாம்' உயர்வு ஒருமையாகவும் வழக்கில் அமையத் தொடங்கவே காலப்போக்கில் அச்சொல் பன்மை உணர்த்த 'கள்' விகுதி சேர்க்கப்பட வேண்டியதாயிற்று. எனவே யாங்கள் என்ற சொல் அமைந்தது. எ—டு யாங்கள் ( சிலம்பு 11—165; 25—62; மேகலை 16—82 )

முந்தைத் திராவிட மொழியின் யகரமெய் மொழி முதற் சொற்கள் தொன்று தொட்டே யகர மெய்யை இழந்தோ அதனை மாற்றி அமைத்தோ வழங்கத் தலைப்பட்டன. பண்டைத் தமிழில் காணப்படும் மொழி முதற் சொற்கள் மொழி முதல் யகரத்தை இன்று இழந்து நிற்பதும், அன்றேல் அச்சொற்கள் வழக்கிழந்து உள்ளமையும் அறியத்தகும்

யாம், யான் என்ற சொற்கள் அதே வடிவில் இன்று வழக்கில் இல்லை. அவை பண்டைக் காலத்திலேயே ஞான், ஞாம் எனத் திரியத் தொடங்கி முதலில் பேச்சு மொழியில் புதிய வடிவம் இடம்பெற்றுப் பின்னர் நான் நாம் என்று திரிந்து சங்க காலத்திலேயே பகுதியாகப் பேச்சு மொழியில் பயின்று, 'நாம்' ஓரளவு இலக்கியத்திலும் இடம் பெறும் நிலையை அடைந்திருக்கலாம் என்று கருதலாம்

யகரம் ஞகரமாகத் திரிதற்கு மொழியில் வேறு பல சான்றுகளும் உள்ளன

யமன் > ஏமன்
யாழ் > ஞாழ்
யாங்கர் > ஞாங்கர்

மலையாள மொழியில் திரிபின் இடைக்கால நிலையில் அமைந்த ஞான் ஞங்ஙள் என்னும் சொற்கள் வழக்கில் உள்ளமையும் கவனித்தற்குரித்து.

ஞகரம் நகரமாகத் திரிதற்கும் மொழியில் பல சான்றுகள் உள

ஞாண் > நாண்
ஞெரிதல் > நெரிதல்
ஞாயிறு > நாயிறு
ஞண்டு > நண்டு
ஞரல் > நரல்
ஞெமை > நமை

எனவே யாம், நாம் (ஞாம் < யாம்) என்னும் சொற்கள் உளப்படுத்தாத் தன்மைப் பன்மை உணர்த்தியது மட்டுமன்றி, உயர்வு ஒருமையாகவும் வழங்கலாயின. எனவேதான் சங்க இலக்கியத்தில் 'நாம்' என்ற சொல்லின் வழக்கு 'யாம்' என்ற சொல்லின் வழக்கினின்று வேறுபடுத்திக் காட்ட இயலாதவாறு மயங்கிக் கிடக்கின்றது. உளப்படுத்தாப் பன்மைப் பெயர்களான 'யாம்', 'நாம்' என்னும் பெயர்கள் சங்க காலத்திற்குப் பின்னர் உயர்வு ஒருமையாகவும் வழங்கத் தொடங்கவே பன்மையை வேறுபடுத்திக் காட்டக் காலப்போக்கில் அவற்றுடன் — கள் விகுதியை இணைத்தனர் எனவே யாங்கள், நாங்கள் என்ற சொற்களும் வழக்கில் அமையலாயின.

## 'நாம்' என்ற சொல்லின் இருவகைத் தோற்றம்

### 1. உளப்பாட்டுத் தன்மைப் பன்மைப் பெயர் 'நாம்'

இதன் முந்தை வடிவம் (proto - form) ★நாம் / ★நம். இதனை உருபொலியன் நிலையில் / ந் — யாம் / என அமைத்துக் காண்பர் மொழியியல் அறிஞர் [3]. மொழி முதல் மெய் நகரம் நீ, நீயிர் ஆகிய முன்னிலைப் பெயர்களில் அமைவதே ஆகும் எனக் கருதுவர். 'நாம்' முன்னின்றுரை உளப்படுத்தும் பெயராதலின் முன்னிலைக் குறியீடு (IInd person marker) நகரம் தன்மைப் பெயருடன் தொன்று தொட்டே அமைந்து 'நாம்' என்ற சொல் ஆக்கப் பெற்றிருக்கின்றது எனலாம்.

குறுந்தொகையில் நாற்பதாம் பாடலில் உள்ள யாம் (என் தாய்), ஞாய் (உன் தாய்) என்ற சொற்கள் இந்த முடிவை உறுதிப் படுத்துகின்றன. ஞாய் என்ற சொல் ந்—யாய் (ஆய்) என்ற அமைப்பால் ஆகியதாகும் திராவிட மொழிகளில் ஞ்>ந் என்ற மாற்றம் மிகுதியாக பெருகிச் செல்லும் ஒரு பொது இயல்பாகும். ஆனால் தொன்மைக் காலத்திலேயே தமிழ், மலையாள மொழிகளில் இம்மாற்றத்திற்குத் தடை ஏற்பட்டுள்ளது. அதனால் இம்மொழிகளில் பல இடங்களில் ஞகரம் நிலைபெற இயன்றதுமன்றி, சில இடங்களில் நகரமுங் கூட ஞகரமாகத் திரிந்துள்ளது

| | | | |
|---|---|---|---|
| எ—டு | நாஞ்சில் | > | ஞாஞ்சில் |
| | நாங்கூழ் | > | ஞாங்கூழ் |

இதனை மொழியில் நிகழும் நேர்மாறு எழுத்துக் கூட்டுரு (inverse spelling) என்பர் ந் — ஆய் > ஞாய் என்று அமைந்துள்ளதும் இதற்கு எடுத்துக் காட்டாகி அமைகின்றது. மேலும் 'நாய்' என்ற சொல்லினின்று வேறுபடுத்திக் காட்டாவே 'ஞாய்' என்று நகரம் ஞகாமாகத் திரிந்தது எனக் கருதவும் இயலும்

**2. உளப்படுத்தாத் தன்மைப் பன்மைப் பெயர் 'நாம்'**

இதன் மூந்தை வடிவம் *யாம்/யம் ஆகும் யாம் > ஞாம் > நாம் என்று நிலைகளில் அமைந்து மாற்றங்களை அமைந்துள்ளது. 'ஞாம்' என்ற வடிவம் தமிழ் இலக்கியத்தில் இடம் பெறவில்லை. ஏனைய இருவடிவங்களும் இடம் பெற்றுள்ளன மலையாள மொழியில் 'ஞாம்' கள் விகுதியுடன் இணைந்து ஞங்கள்' என வழக்கில் இடம் பெற்றுள்ளது. யாம் > யாங்கள் எனவும் நாம் > நாங்கள் எனவும் கள் விகுதியுடன் அமைந்த சொற்கள் இடைக்காலத் தமிழிலே வழக்கில் அமையலாயின இக்காலத் தமிழில் 'நாங்கள்' என்ற சொல்லே இத்தன்மைப் பன்மைப் பெயராக வழங்குகின்றது 'யாம்' என்ற சொல்லின் இடத்தை 'நாங்கள்' என்ற சொல் எவ்வாறு பெற்றது என்று இவண் கண்டோம்.

**உருபேற்கும் வடிவங்கள்**

உளப்பாட்டுத் தன்மைப் பன்மைப் பெயரின் எழுவாய் வடிவம் தொன்று தொட்டு இன்றுவரை 'நாம்' ஆகும். உருபேற்கும் வடிவம் 'நம்' ஆகும் உருபேற்கும் வடிவில் நெட்டுயிர் குறுகி உள்ளது.

ஆனால் உளப்படுத்தாப் பன்மைப் பெயரின் எழுவாய் வடிவம் யாம் > ஞாம் > நாம்; யாங்கள் > நாங்கள் எனப் பல மாற்றங்களைக் கண்டுள்ளது. மேலும் உருபேற்கும் வடிவம் எம் > எங்கள் என்று எழுவாய் வடிவின் மொழி முதல் கெட்டு ஆகாரம் எகரமாகத் திரிந்தும் கள் விகுதி இணைந்தும் அமைந்துள்ளது எனலாம் மிக அருகியே 'நாங்கள்' என்ற வடிவம் செய்யுள் வழக்கில் இடம் பெற்றுள்ளது.

எ—டு. நங்கள் வரிவளை யாயங்காளோ

(திவ். திருவாய் 8 2 1)

தன்மைப் பெயரின் இருவகை வேறுபாட்டின் அடிப்படையில் அமைந்த உருபேற்கும் வடிவங்களுடனும் உறவின்முறைப் பெயர்கள் அமைகின்றமையை இங்குக் காண்போம்.

எங்கை நங்கை நுங்கை தங்கை
எம்பி நம்பி நும்பி தம்பி
எமர் நமர் நுமர் தமர்
எம்முன் நம்முன் நும்முன் தம்முன்
எம்பிரான் நம்பிரான் நும்பிரான் தம்பிரான்

**திராவிட மொழிகளில் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை**

| | எழுவாய் வடிவம் | உருபேற்கும் வடிவம் |
|---|---|---|
| தமிழ் | நாம், நம்பொ | நம் —, நங்கள் |
| மலையாளம் | நாம், நோம் | நம் —, நம்மள் — |
| கன்னடா | நாம்(பழங்கன்னடா | நம் — |
| தோடா | ஓம் | ஓம் — |
| கோதா | ஆம் | அம் — |
| துளு | நம நமென நாவு | நம் — |
| தெலுங்கு | மனமு | மன — |
| கோலாமி | நேண்ட் | நேண்ட் — |
| நாய்ச்சி | நேம், நேண்ட் | நேண்ட் — |
| குரூச் | நாம் | நம் — |
| மால்டோ | நாம் | நம் — |
| பிராகுய் | நன் | நன் — |
| கோண்டி | அப்லோ | |
| கோண்டா | மாட் | |
| கூயி | ஆயு | |
| கூவி | மாரோ | |
| பெங்கோ | ஆஸ் / ஆஹ் | |

தென் திராவிட மொழிகளான தமிழ், மலையாளம், பழங் கன்னடம், தோடா, கோதா ஆகியவற்றிலும் வட திராவிட மொழிகளான குரூக், மால்டோ ஆகியவற்றிலும் பழமையான உளப்பாட்டுத் தன்மைப் பன்மைப் பெயர்கள் உள்ளன. இக் காலக் கன்னடத்தில் இவ்வேறுபாடு காணப்படவில்லை நடுத் திராவிட மொழிகள் பெரும்பாலும் தன்மை முன்னிலை இடப் பெயர்களில் மொழிமுதல் மெய்யை இழந்து விட்டமையால் தொன்மொழியில் அமைந்திருந்த உளப்படுத்தும், உளப் படுத்தா வேறுபாடு நிலைபெருமற் போயிற்று எ — டு நாம் > ஆம்; யாம் > ஆம். எனவே இருவகை வடிவங்கள் ஒன்ருக அமைந்து விட்டன என்ருலும் காலப் போக்கில் தெலுங்கு. கோலாமி, நாய்ச்சி, கூவி, கூயி, பெங்கோ, கோண்டி, கோண்டா ஆகிய மொழிகளில் புதுப்புனைவால் உளப்பாட்டுத் தன்மைப் பன்மைப் பெயர்கள் இடம் பெற்று விட்டன. தோடாவிலும் கோதாவிலும் மொழி முதல் மெய் மறைந்து இருபபினும் அவற்றில் காணும் உயிர்வேறுபாடு உளப்பாட்டுப் பன்மையை உணர்த்தி நிற்கின்றது.

### முந்தை மொழியில் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை

கால்டுவெல், கிரியர்சன், யூலிபிளாக்கு பரோ போன்ற திராவிட மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளில உள்ள உளப்பாட்டுத் தன்மைப் பெயர்களைக் கண்டுள்ளனர். [4] கிரியர்சன் என்ற அறிஞர் உளப்பாட்டுப் பன்மை, உளப் படுத்தாப் பன்மை என்ற வேறுபாடு இருந்திருக்காது என்றும் முண்டா மொழிக் குடும்பத்தின் தாக்கத்தால் பிறகாலத்தில் தான் இருவகைப் வேறுபாடு திராவிட மொழிகளில் ஏற்பட்டி ருக்கலாம் என்கின்ருர் இவர் தமது கூற்றிற்குச் சான்ருகக் குரூக், கூயி, தெலுங்கு மொழிகளில் உளப்படுத்தாப் பன்மைக்கு உரிய வடிவங்கள் தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளில் உள்ள உளப்பாட்டுப் பன்மை வடிவங்களை ஒத்துள்ளனவென்றும், (இக்காலக்) கன்னடா பிராஇய், கோண்டி மொழிகளில் ஒரே வடிவமே உள்ளது என்றும் கூறி உள்ளார். [5] அறிஞர்தரும் இச் செய்திகள் முற்றிலும் ஏற்கத்தக்கவை அல்ல. அறிஞர் பரோ என்பார் பிற ஒரு மொழிக் குடும்பத்தின் ஆற்றலால் இந்த இருவகைத் தன்மைப் பன்மை வேறுபாடு திராவிட மொழிகளில் ஏற்பட்டிருக்கலாம் என்பதை ஒப்புக்கொண்டாலும், இது பழங்கால மொழியிலேயே அமைந்து விட்டது என்கின்ருர். [6]

பிற்காலத் திராவிட மொழியியல் அறிஞர் பலரும் தன்மைப் பன்மையில் காணும் இந்த இருவகை வேறுபாடு முந்தைத் திராவிட மொழிக்குரியது என வற்புறுத்தி உள்ளனர். தென் திராவிட மொழிகளிலும். வட திராவிட மொழிகளிலும் இவ் வேறுபாடு ஒரே வகையான வடிவங்களால் குறிக்கப்படுவதால் இது முந்தை மொழியின் இயல்பாகக் கொள்ளப்படுதல் ஏற்புடைத்தாகும்.

## குறிப்புக்கள்

1. நச்கினார்க்கினியர் — தொ. சொ. 164.
   கல்லாடனார் — தொ. சொ. 165.
2 இளம்பூரணர் — தொ. சொ. 199.
   சேனாவரையர் — தொ. சொ. 302
   நச்சினார்க்கினியர் — தொ. சொ. 204.
   கல்லாடனார் — தொ சொ. 205.

3. Krishnamurti, BL. "Dravidian Personal Pronouns" Studies in Indian Linguistics p. 194

4. Caldwell, R, A Comparative Dravidian Languages p 414

   Grierson, G. A.. Liniguistic Survey of India Vol IV, pp. 293, 294.

   Block, Jules, The Grammatical Structure of Dravidian Languages, p 29

   Burrow, T. Collected papers on Dravidian Liniguistics, pp. 116, 118

5. Grierson, G. A.. Liniguistic Survey of India Vol IV p. 293, 294

6. Burrow, T. Collected Papers on Dravidian Linguistics, pp. 116 — 118

(சென்ற இதழின் தொடர்ச்சி)

# கம்பரின் வீரச் சுவை

திரு. K. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல், தஞ்சை.

இசைமைபற்றித் தோன்றும் பெருமிதம் பொதுவாக வீரத்தின் வழுவாப் பெருமையினைப் போரின்கண் குறிக்கும். இத்தகைய நல்வீரம் யாவர்பாலும், ஏனைப் பெருமைகளுடன், ஒப்ப நில்லாது, பேரெல்லையாக, புகழெனினும் உயிரையும் கொடுக்கும் ஒரு சிலர்பால், ஆண்மையின் விளைவாக நிகரற்றுச் சிறந்து நிலைபெறுவதால், பெருமிதம் எனப் படலாயிற்று. தூய வீரமும் போர் வன்மையும் பொருந்தியவரே, வாழினும் வீழினும் பேராண்மை மாண்பினையே எத்துணை இடர் உறினும் நாடி, தமர் பிறர் அறியாதும், பழியொடு வருவனவற்றையும் அகற்றியும் அமர் புரிவர்; மற்றும் வெற்றியில் வல்லினமெய் போக விடாது போரினில் தன்னடக்க ஆற்றலால் சிறந்து விறலுடன் நிற்கும் பெருமித வாழ்க்கையினை யுடையராவர்.

இசைமை பற்றிய பெருமிதம் தோன்றும் வகையினையும், அது புலப்படுத்தும் திறனையும், கம்பர், தன் காப்பியத்தின்கண் தெளியுமாறு, கவித் திறமையோடு வகை யுறுத்திக் காட்டி யுள்ளது பல்கால் நுகர்ந்து இன்புறற்பாலது. அகந்தைக்கு இரையாகாத புகழுடைய வீரமே பெருமிதமுறுவதெனக் கம்பர் கருத்துடையராய், வெறும் புகழை நாடாது புகழுக்குக் காரணமாய் நற்பண்புச் செய்கைகளை பேராண்மை காட்டும் வீரத்தோடும், அறத்தோடுமியற்ற வேண்டுமென்பதையும் வற்புறுத்தியுள்ளார். மற்றும் மாற்றலரை வஞ்சியாது எதிர்நின்று அடுதலும் தொலைதலும் போரின் பயனகப் பண்டு வழங்கியதைக் கம்பர் மாற்றி போரின் விழுப்பயன் புகழைக்காத்தலென்பதையும் நிறுவியுள்ளார். எனவே, இசைமை பற்றிய வீரச்சுவை, ஏனைய பல சுவைகளை விட வீறுடன் விளங்க, அறம்பற்றிய வீரம விளைவிக்கும் அற்புதத்தைக் கம்பர் தம் காவியத்தில் காண்பித்துத் தனது காவியத்தை வீரக் காவியமாகப் படைத்துள்ளாரென்பது பெறப்படும். தன்னலம் துறந்து மன்னுயிரோம்பும் வண்மையும் திண்மையுமுடைய மல்வீரராய வாலி அறத்தின் வலிமையினை யுணர்ந்து தன் தவற்றை ஒப்புக் கொள்வதின் மூலம் தெய்வ மரணத்தில் தன்னேரில்லாத் தவ வீரராக விளங்கியதையும் அறத்தின் உரத்தினை யுணர்ந்த கும்பகருணனும், அறத்தின் நிலையினை யறிந்த இந்திரசித்தும், முறையே தன்

தமையனுக்காகவும், தந்தைக்காகவும் தங்களையே தியாகம் செய்து கொள்ளுவதில் தயங்காத வீரத் தன்மையுடையவர்களாய்த் திகழ்ந்ததையும் கம்பர் பெருமித வுணர்வோடு பாராட்டிச் சிறப்பித்துள்ளார். இவ்வாறே காவியத்துக் காண்டங்களில் இசைமை பற்றிய பெருமிதத்தைப் பற்றி அறியக் கிடக்கும் செய்திகள் மிகப்பல.

இசைமை பற்றிய பெருமிதத்திற்கு எடுத்துக் காட்டாகக், கம்பர் இராவணனைப் பற்பல சூழ்நிலையிலும் வைத்துக் காணுமாறு படைத்து அவனது குறையினையும் நிறையினையும் புலப்படுத்தி, இசைமை பற்றிய பண்புகளை ஒளி விட்டு மிளிரும்படி செய்து விடுகிறார்; அவனது மாட்சியில் வீரத்தின் வீழ்ச்சியினை நுட்பமாகக் கண்டறிய வைத்தார். அரக்கர் கோமானாகிய இராவணன் வீரச்சால்பு பெற்றுயர்ந்தவனென்பதைக் கம்பர், அவனது மறங்கெழுமிய தோற்றத்தின் வழி பல படக்கூறி இறும்பூது பயப்பச் செய்துள்ளார். அரக்கர்கோன், 'ஆலகாலம் திரண்டன்ன யாக்கையான்.'

'கடுங்கனல் விடமுங் கூற்றும் கலந்து கால் கரமும் காட்டி
விடுஞ்சுடர் மகுடம்மின்ன, விரிகடல் இருந்ததென்னக்
கொடுந் தொழில் மடங்கலன்னான்':

அஞ்சா நெஞ்சங் கொண்டு 'திக்கோடும் உலகனைத்தும் செருக் கடந்த புயவலி மிக்கவன்';

நீரிலே பட்டுச் சூழ்ந்த நெருப்பிலே பட்டு நீண்ட
பாரிலே பட்டு வானப் பரப்பிலே பட்ட வெல்லாம்
போரிலே பட்டு வீழப் பொருதவன்';

கூற்றையும் ஆடல் கொண்டவன்; ஒளியுடைய கோளிரண்டையும் கொடுஞ் சிறையில் வைத்தவன் 'முக்கோடி வாழ் நாளும் முயன்றுடை பெருந்தவமும், எக்கோடியிலும் எவராலும் வெலப்படான் எனும் வரமும்' பெற்ற இத்தகைய வீரன் சூர்ப்பனகையின் துர்ப்போதனையின் வழி, பிறன்மனை நயந்த குறையால் 'வஞ்சனேன் எனக்கு நானே' என உணர்ந்து தானே இராமரது நெடும் பகையினைத் தேடி முடிவில் அவராலே கொல்லப் பட்டுத் தன் வீரப் புகழை வீழச் செய்தான்.

இந்திரப் பெரும்பதமொடு இசைமை பற்றிய பீடுயர் பெருமிதத்துடன் வாழ்ந்த இராவணன் சீதையை நயந்ததால் அன்னை மட்டும் மறந்திலாது சீருடைய அனைத்தையும் மறந்தான்.

குலப் பெருமையின் சிறப்பினை எண்ணாது, அதனைச் சிறிதெனக் கொண்டு சீதையைப் பெரிதெனக் கருதினான். அதனாலே, சிறந்த வீர வாழ்வுடையான் அறம் மறந்து, மறம் துறந்து உயிர்கொடுத்துப் பழி கொள்ளும் பித்தனென உலகு பகரும் நிலையினைப் பெற்றான். இத்தகைய விறல்வீரனை, பெண்மை, எதிர்பாராத அவனது சூழ் நிலையினைப் பொறுத்து எங்ஙனம் ஆட்டிப் படைத்துள்ளதென்பதை, கல்வியிற் பெரியாராய கம்பர், படிப்படியாக அறிவுறுத்தி, பிறர்மனை நயந்தானுக்கே அறம் கேடு சூழும் என்ற படிப்பினையையும் நலப்பாடு தோன்ற உணர்த்தி யுள்ளார்.

கும்பகருணனும் இந்திரசித்தும் சீதையைச் சிறையிலிருந்து விடுவிப்பது நலமென மாவீரனாகிய இராவணனுக்குச் செப்பும் காலத்தும் மானிடரிருவரையும் கூனுடைக் குரங்கினையும் வணங்கி வாழும்படி சீதையை விடுவதற்காகவா சீதையை சிறை செய்தேன்! எனப் பேதை மனத்தினன் இயம்பினான். மேலும்,

> 'மீதெழு மொக்குளன்ன யாக்கையை விடுவதல்லால்
> சீதையை விடுவதுண்டோ இருபது தோளுண்டாக்'
> 'விட்டனன் சீதை தன்னை என்றலும் விண்ணோர்
> நண்ணிக்
> கட்டுவதல்லால் என்னை யா னெனக் கருதுவாரே'

என இராவணன் வீராவேசத்துடன் மொழிந்து பின் பெண்மையால் பேதலிக்கப்பட்டுப் பிதற்றுவானானான். மற்றும் அவ்வான் புகழினன், வெற்றியும் தோல்வியும் போர் வீரனுக்குச் சமமெனக் கொண்டு

> 'வென்றிலன் என்றபோதும் வேதம் உள்ளளவும் யானும்
> நின்றுளன் அன்றோ மற்றவ் விராமன்பேர் நிற்குமாகில்'

எனத் தன்னின் சிறந்த வீரப் புகழைப் பெரிதும் விரும்புவானான். தன் மகனாகிய இந்திரசித்து இறந்ததும் அவனதுடலைக் கண்ணுற்றபோது

> 'நிலையமாதிரத்து நின்ற யானையும் நெறிக்கண்ணன்
> மலையுமே எளியவோ நான் பறித்தற்கு? மறுவில் மைந்தன்
> தலையும் ஆருயிரும் கொண்டார் அவருடலோடும் தங்கள்
> புலையனேன் இன்னும் ஆவிசுமக்கின்றேன் போலும்
> போலும்'

என அலமந்து வெந்துயர் பொருந்திட விழுந்தலறி தன்னையே நொந்தான். இராம இலக்குமணர் இனி உயிருடன் இருப்பது

தன் விறலின் பெருமைக்கு இழுக்கென்றும் மற்றும் தன் வீரியத் தன்மைக்கும் மாறுபாடென்றும் கருதினன்.

இருவரோடும்
ஆண்டுள குரங்கும் ஒன்றும் அவர்களத்து ஆரும் இன்னும்
மாண்டிலர் இனி மற்றுண்டோ இராவணன் வீர
வாழ்க்கை’

என அருந்துயர் பொருந்த வெதும்பினன், இலங்கையின் வீரவேந்தன். வெதும்பிய வேந்தன் சீதைபால் சீற்றங்கொண்டு அவளைத் தன் வீரவாளால் வெட்டத் துணிந்த ஞான்று, அவனது வாள் நாணத்தால் கூச்சமுற்று உயிரை வாங்காது குறுகிப் போகும் என மகோதரன் கூறியதைக் கேட்டு, மாசுதரும் செயல் தன் மாண்புடைய புகழுக்கு ஏற்ற தன்றெனத்தான் எண்ணியதை விடுத்தான். பின்னர்ப் பேராண்மையொடு போரினை முடிக்கக் கருதிய இராவணன்

‘யாரேனுந்தாகுக யான் என் தனி ஆண்மை
பேரேன் இன்றே வென்றி முடிப்பன் புகழ் பெற்றேன்’

எனக் கூறி இராமருடன் நேருக்குநேராகப் போர் பொருதலைத் துணிந்து முற்பட்டான். இதனைக் கம்பர்

‘பெருமைசால் கொடும் பாவமும் பேர்கலாத்
தருமமும் எனச் சென்றெதிர் தாக்கினர்’

எனக் கவினுறக் கூறியது உன்னற்பாலது.

இராமர் திருமால் நம்பனின் கூறனதலால், அவரை இராவணன் போரிட்டு வதம் செய்ய விடுவது தகாதெனத் தீர்ந்த கருத்துடையராய்க் கம்பன், இராவணன் மனத்தில், தேரை உதிர்த்து இராமரை சிறை பிணித்துக் கொள்ளும் எண்ணம் பாயும்படிச் செய்த முடிபு சிறப்புடைய மரபு மேம்பாடுடையது.

மானுடன் தோள்வலி
ஒடித்துத்தேரை உதிர்த்து ஒரு வில்லொடும்
பிடித்துக் கொள்வன் சிறை

எனக் கூறி இராவணன், கண்டார் வியப்புற மும்முரமாகப் போர் தொடுத்து மூர்ச்சையுற்றான், இராவணனது தேர்ப்பாகன் தேரைப் போர்க்களத்தினின்றும் எடுத்தேகவே அமைதியுடன் விற்சமரியற்றிய இராமர் அம்பெய்துவதை விடுத்தார். மூர்ச்சை

தெளிந்த அரக்கன் தான் இராமருக்கு புறங்கொடுத்திருப்பதை உணர்ந்து தன் தேர்ப்பாகனை

'தேர் திரிந்தனை தேவரும் காணவே
வீர விற்கை இராமற்கு வெண்ணகை
பேரவுய்த் தனையே பிழைத்தாய்'

என விளித்து நாணமுற்று. மீளவும் போர்க்களத்திற்குச்சென்று முன்னிலும் மும்மடங்கு வலியும் சினமுங் கொண்டு வெம்மையுடன் போர் பொருதான், இராமரும் அமரரும் அதிசயிக்க அம்பினை விரைவாக எடுத்துத்தொடுக்க, இராகவன் தன் புனித வாளி

'திக்கொடு உலகனைத்தும் செருக்கடந்த புயவலியும்
தின்று மார்பில்
புக்கோடி உயிர்பருகிப் புறம் போயிற்று',

வாளி துளைக்கும் வேதனையால் இலங்கை வேந்தன் வருந்தி முடியொழிந்து ஆவி குலைந்து வையமிசை சோரியொடு சோபமொடு விழுந்த ஞான்று அவனது உயிர் துறந்த முகங்கள் வளமை எழிலுடன் ஒளி வீசி, மும்மடங்கு வீரப் பொலிவுடன் விளங்கியதைக் கம்பர்,

'வெம் மடங்கல் வெகுண்டனைய சினமடங்க
மனமடங்க வினையும் வீயத்
தெம்மடங்கப் பொருதடக்கைச் செயலடங்க
மயலடங்க ஆற்றல் தேயத்
தம்மடங்கு முனிவரையும் தலையடங்க
நிலையடங்கச் சாய்த்த நாளின்
மும்மடங்கு பொலிந்தன அம்முறைதுறந்தான்
உயிர் துறந்த முகங்கள் அம்மா!'

எனப் பாராட்டு முகத்தால் அவன் பொருது வீழ்ந்த சீரிய நிலையை நெடுந்தல மடங்கலும் வியக்க மனமுவந்து நயந்து, இறப்பினும் அவன் இறவாதவனே எனச் சிறப்பித்துள்ளார்.

ஆயுங்காலை இப்பாட்டின் செம்பொருளழகு வீரச்சுவையினை ஒளிபடச் சுரக்கும் பல நுட்பப் பொருள்களை ஈர்த்துப் பிணிக்கும் ஒலி நயத்தோடு பொலியும் தனித் திறனுடையது ஈண்டு. பொருளுக்கேற்ப, கலைநலம் நிரம்பி மெய்ப்பாடு பயக்கும் வண்ணம் சொல்லின் திறத்தாலே உணர்வினை யூட்டி அவலச்சுவைப்

பெருக்கினை அகல விளக்கி அதன் கண் கற்பனையின் துணை கொண்டு, வீரச் சுவையோடு வியப்புச் சுவையினையும் நிலை நாட்டி, கம்பர் இராவணனது மரண வீரத்தைப் புலப்படுத்தியது உளங்கொளற்பாலது மற்றும் இறப்பது உறுதியாதலை யுணர்ந்த இராவணன் இறுதிவரை வென்றி கொண்டு புகழடைய வேத முதற் காரணனோடு அமர் புரிய முயலுங்காலை, நெடு நிலத்தே இராமரது வாளினால் இறந்து விழுந்தபோது, அவனது வீரம், தவம் முதலியன மெய்யுணர்வொடு கலந்து மலர்ந்து அவனது முகத்தில் பொலிவைத் தந்துள்ளதைக் கம்பர் தெளியவைத்து, படிப்போருள்ளத்தில் ஆழ்ந்த அமைதியாய உணர்வு பெருகும்படி செய்து விடுகிறார். மற்றும் அவனது ஆருயிர் வீரவியல்போடு, இறையருளிற்றோய்ந்து இன்புறும் மாண்பு பெற்று, திசையெல்லாம் இசை வீசப் பொலிந்து விளங்குவதையும் சுவைபடச் சுட்டியுள்ளார். விற்போரில் உயிர் துறந்த இராவணனது முகங்கள், காவியக் கலையுலகினை ஆக்கிப் படைப்பவராகிய கம்பரது செய்யுளின்கண் பொலிவுற்று உயிர் துறவா முகங்களாய் விளங்கியதை உணருங்காலை, வானுயர் கம்பர், மிடலோடு படி மீது மிகுமேவல் கொண்ட இராவணனது வீர வாழ்வு, துயர்க் கடலில் அமிழ்ந்து துன்பியலோடு முடியாதவாறு. இன்பக் கடலின் கரையினை எய்த வைத்துள்ளமை மருட்கையை விளைப்பதாகும். ஈண்டு கம்பர், இராவணனது வீரச் சீர்விளங்க வீரத்தின் இலக்கணத்தை உறுதிப் படுத்தியுள்ளார்.

வீரக்கவிஞராய கம்பர் 'போரிடை மீண்டொருவருக்கும் புறங்கொடாப் போர்வீரன் பொருது வீழ்ந்த, சீரினையே மனமுவப்பவுருமுற்றுந் திருவாளன் தெரியக் கண்டான்' எனக் கூறுமிடத்து முதுகில் தழும்புகள் கொண்ட இராவணனைக் கொன்ற தன் வீரம் பொற்பற்று மாசுற்றதென இராமர் மனத்தில் எண்ணியதையும், அதனுன் தன்குடி நிலைச்சிறப்புக்கு இழுக்கென்று மனம் புழுங்கியதையும் நமக்குக் காணவைத்தார். திக்கு வாரணங்களுடன், இராவணன் ஆண்மையொடு அஞ்சாது போர் புரியும்போது அவற்றின் மருப்புகள் மார்பிற் பாய்ந்து முதுகுவரை சென்று முறிந்து பட்டதால் ஏற்பட்ட தழும்புகள் அவனது வீராற்றலைக் குறிக்குமென, வீபீடணன் கூறக் கேட்ட இராமர்

'அன்னதோ என்னு ★ ★ ஐயமும் நாணமும் நீங்கித்
தன்ன தோளிணையை நோக்கி' னார்,

எனக் கம்பர் கூறி, பண்டு அரனாது வில்லினை யொடித்த இராமரது வீரத்தையும் ஈங்கு நாம் மீண்டும் சுவைத்து விந்தை யுணர்வோடு போற்றும்படி செய்த அவரது உள்ளத்தியல்பும் கலை நயமும் எண்ணத்தக்கவை

காவியப் புலமையிலும் ஓவியக் கலையிலும் வல்ல கம்பர், தமது காவிய மாந்தர்களது பேராண்மையினையும். இசைமை தழுவும் வீரத்தினையும், துணிபையும் பெருமிதச் சுவைபடப் பாராட்டியுள்ளதை, வீரப் புகழ் மேவிய தம் காவிய நூலொடு பழகியவர் அனைவரும் நுகர்ந்து பெருமித வியப்பெய்துவர் வலிய அரக்கர்களொடு மானிடரும் வானரரும் போருடற்றுந் திறத்தைக் கம்பர் நயந்தோன்றக் கூறி, போர்க்களத்தில் வானரர் பலரிருந்தாலும் நலன் உற்ற புலனேடு கூடிய அஞ்சாமையுடன் இராம இலக்குமணர், நாதம் பொழிந்து செல்லும் வில்லின் நாணொலிகொண்டு போரைத் தாங்கி நடத்திய நல்லாண்மை யினை விளக்கியுள்ளார்: மற்றும் அவர்கள் கணை மாரி பல சிந்தி நற்சமர் புரிந்த வகையினையும் புலப்படுத்தியுள்ளார். வானரர் மலையும் மரமுங் கொண்டு, வில்லும் வாளும் வேலுங் கொண்ட வீர அரக்கர்களோடு பொருது, அன்னூர் போர்க் களத்தே மாண்டாரன்றி மீண்டாரில்லை யெனும்படி அன்ன வரை வீழ்த்தியது போராட்டமல்லாது விளையாட்டாகவே விளங் கியதாகவும் கம்பர் காட்டியுள்ளார். மற்றும் அறவலிமைக்கும் தெய்வ பலத்திற்கும் முன் அரக்கரது மிக்கெழுந்த ஆரவார அடல் சிறுமையுடைத்தென உணர்ந்து ஒழுகும் பண்பாட்டின் சிறப்பியல்பை அறிவோடு எண்ணும்படியாகவும் செய்து விடுகிறூர்

அறத்தின் நாயகனுகிய இராமருக்குற்ற தூதுவராக இலங் கும் அனுமனை அடக்கமும் ஒடுக்கமுமுள்ள சிறந்த வீரனுகக் கம்பர் திகழ வைக்கிறூர். மற்றும் இவ்வீரனை மெய்ம்மையின் வேலி போல்வானென்றும், தனது வீரப் பெருங் குணத்தால் தன்னைத் தான் அலது ஒப்பிலாதான் எனப் பாராட்டவும் செய் கிறூர் தற் பெருமையும் தற் புகழ்ச்சியும் சிறிதுமில்லாது அனுமன் தன் வென்றியை உரைக்கவும் வெள்கி நிற்கும் தன் மையன் என்பதைப் பரிவுணர்வுடன் கம்பர் பாரித்துப் புகழ் கிறூர் இதனைப் ‘போரில் நீண்ட பேரரக்கரோடும் நிகழ்ந் ததும் (இலங்கையில்) நெருப்புச் சிந்தி மீண்டதும் (இராமருக்கு) விளம்பான்’ என்பதின் மூலம் கம்பர் நாம் அறியும் வண்ணம் தெளியவைத்துள்ளார். அனுமனை அரியுருவான வீர ஆண்

தகையெனவும். வானவர் அம்சம் கொண்டு அறம் அறிந்து வீரச் செயல் பல ஆற்றும் அடலாண்மையன் எனவும் கம்பர் நமக்கு அறிமுகப்படுத்தி அவரது போருக்குரிய வலிமை உரைத் தற்கும் நினைத்தற்கும் அரிதென அறைகுவர். வலிமையொன்றே அறிந்த இலங்கை வேந்தனை அனுமன் தன்னுடன் மற்போர் தொடுக்கும்படி கூவியழைத்து, அவனது மார்பில் பாய்ந்து ஆங்கு முறிந்த யானை மருப்புகளை அவனது புகழ் சிந்தினது போன்று உதிரும்படியும், த்ன் மெலிவையும் உணர்ந்து கொள்ளும்படியும் அவனைத் தாக்கியதும், அம்பும் வேலும் மயங்குமிடமெல்லாம் முன்னின்று வீர விளையாட்டினை நிகழ்த் தியதும் இசைமை தழுவிய பெருமிதமாகும்.

'வலி என்பதும் உளதே, அது நின்பாலது மறவோய்!

★ ★ ★ ★ ★

மெலிவு என்பதும் உணர்ந்தேன், எனை வென்றாய்.
இனி, விறலோய்

என வீரமுறு அனுமனது வலிமையினை இராவணன் மெச்சு வதும், அதற்கு அனுமான்,

★ ★ எனை நீ
வென்றாய் அலையோ, உன் உயிர்
விடாது உரை செய்தாய்'

நின்னுயிர் போகாதது மல்லாது இத்துணை நேரம் என் னிடம் நீ சொல்லாடல் செய்கிறபோது, நீயல்லவோ என்னை வென்றவன்'

எனப் புகன்றதையும், கம்பர் உணர்த்துங்கால், இசைமை எவ்வாறு பெருமிதக் கொடுமுடியில் மூகிழ்ந்து கலந்து விருப் பொடு கருக் கொள்ளுகிறதென்பது ஒரோவழி துணியப்படும்.

வீர அனுமன் அட்ச குமரனுடன், தன் கையே ஆயுதமாகக் கொண்டு வீரப்போர் நிகழ்த்தி அவனையும் கொன்றும், அள வற்ற அரக்கர் படையினையும் பேராற்றலுடன் சிதைத்து அழித் ததையும், பாற்கடலைக் குழம்பச் செய்த மந்தர மலையையெடுத்து. அனுமன் இலங்கையைக் கலங்கச் செய்த வீரப் பொலிவையும் கம்பர் துலங்க வைத்தது உன்னி ஓர்தற்பாலது கம்பர் அனுமனது வீர வாசகங்களையும் வரம்பில்லாத பேராண்மை யினையும் பலவாறாக எடுத்தியம்புவதும் இவண் வியத்தற்குரியது. போர்க்களக் காட்சியைக் கம்பர் தாழியாகக் கருதும்படி செய்து,

சேனையைத் தயிராகவும் அனுமனை மத்தாகவும், அனுமனுல் தாக்குண்ட சேனை மத்துறு தயிர் போன்று உடைந்து சிதறிய தாகவும், மற்றும் அனுமனை வெங்கதிரோனுகவும் உவமித்து. அரக்கர் சேனை கதிரவன் வெய்யிலில் அகப்பட்ட புழுப்போன்று துடித்து மாண்டதாகவும், அரக்கர்கள் சிலர் அனுமனது கூற்றத்தன்ன செய்கைக்கு அஞ்சி திசை தெரியாது தாறுமாருக ஓடிப் பிணக்குவியல்களில் நுழைந்து மறைந்து கொண்டதாக வும், கம்பர் புலப்படுத்தும் இயல்பு. அனுமனது ஈரமன வீரப் பண்பிற்கு இலக்கியமாகத் தோன்றும் மாண்புடையது.

சுக்கிரீவனைக் கம்பர் சிறந்த வீரமும் நிறைந்த பலமுமுடைய 'நோன்மைசால் கவியரசு' எனக் குறியிட்டு, வரம்பில்லாத ஆற்றலுக்குரிய இராவணனை வெல்லும் வல்லமை சுக்கிரீவனுக் குண்டென்பதைத் துலங்கச் செயகிருர். முரண்கொண்ட வெய் யானுகிய சுக்கிரீவன் இராவணனை எதிர்த்து, துணை வேண் டாது வீரப்போர் நடத்துவதும், தன்னந்தனியனுய் நால்வகைப் படைகள் முன்னர்த் தோன்றி, ஒவ்வொரு படையினையும் ஒவ் வொரு சுக்கிரீவன் பொருதானெனும் படியாக விரைவுடன் எதிர்த்து வெற்றி கண்டவன்: இராவணன் மீது பாய்ந்து, தேவர்கள் இகழவும் அரம்பையர்கள் வெறுக்கவும், வெம்புலி போன்று அவனைத் தாக்கி, வலம்பட வீழ்த்தி, அவனுக்கு நாணத்தை யுண்டாக்கும் வகையில் அவனது மணிமுடிகளைப் பறித்தவன். இத்தகைய வீரத்திற்கு விளக்காகத் திகழும் இவன், தன் வன்மையினமையை

' ⋆ ⋆ இன்று கண்டும் அக்கிளிமொழி மாதரானை
மீட்டிலேன்! தலைகள் பத்தும் கொணர்ந்திலேன்! வெறுங்கை வந்தேன் '

என வாகைப்புயங் கொண்ட இராமர்பால் தன்னையே இழிவு படக் கூறி, அதனுன் தனது ஏனைய வீரவலியினை நாம் புகழும் வண்ணம், கம்பர் வகை செய்துள்ளது, தாழ்விலாததோர் வீரச் செல்வக் காட்சியாகும்.

'கூற்றும் என் பெயர் சொலக் குலையும்'

என்று கூறும் அடலாண்மை மிக்க வாலியின் வீரப் பொலிவைக் கண்டு வில்வீரராய இராமர் எவ்வாறு வியப் புற்ருரென்பதைக் கம்பர்,

'அவ்வேலை இராமனும் அன்புடைத் தம்பிக்கு. ஐய!
செவ்வே செலநோக்குதி; தானவர் தேவர் நிற்க,
எவ்வேலை. எம்மேகம், எக்காலொடு எக்காலவெந்தீ
வெவ்வேறு உலகத்து இவன் மேனியை மானும்'
என்றான்,

என்பதிலிருந்து ஒருவாறு வாலியின் வீரத்தோற்றமும் தெளியப்படும் அவன் நாலிரு திக்குயானைகளின் வலியினை அடக்கியாளும் இராவணனையும் எளிதாகத் தன் வாலில் கட்டி அவனது வன்பினைக் கெடுத்து, அவன் தன் மெலிவினை யுணரச் செய்யும் வரம்பிலா ஆற்றலான் இதனாற்றான் இராவணன் வாலிபால் தோழமை வேண்டி இரந்து நின்று நட்புச் சூளுறவினைக் கொண்டான். வாலியினது வாலின் ஆற்றலை இராவணனது நெஞ்சம் உணர்ந்து துடித்து அதிர்ச்சியுற்றதைச் சொல்லின் செல்வனாகிய அனுமன் 'வாலியின்வால் செலாதவாய் அலது இராவணன் கோல் செலாது' என இராமருக்கு அறிவுறுத்தியது ஈண்டுக் கருதற்பாற்று. இதன் வழி இராம காதையின் கருப்பொருளாகிய இராவண வதத்திற்கு வாலியின் வால்வலியினை ஒழித்தல் முதற்கண் இன்றியமையாததென அனுமன் மென்மையாய்க் குறித்து. வாலி வதத்தில் இராமருக்குக் கவனம் ஏற்படும்படி செய்த திறன் சிந்தித்து உணரற்பாலது. மற்றும் வாலி, அளவிலா வலி கொண்டு பாற்கடலைத் தான் தனியனாக நின்று கடைந்தெடுத்த நறிதாம் நல்ல முதத்தைத்தான் கொள்ளாது அமரர் அனைவரும் வாழ வழங்கிய வள்ளியோன்.

'பஞ்சின் மெல்லடியாள் பங்கன் பதயுகம் அலாது, யாதும்
அஞ்சலித்து அறியாச் செங்கை ஆணையாய்!
அமரர் யாரும்
எஞ்சலர் இருந்தார் உன்னால்; இன்னமுது ஈந்த
நீயோ
துஞ்சினை' வள்ளியோர்கள் நின்னின்யார் சொல்லற்
பாலார்?
'எந்தையே! எந்தையே! இவ்எழுதிரைவளாகத்து
யார்க்கும்
சிந்தையால், செய்கையால் ஓர் தீவினைசெய்திலாதாய்!

நொந்தனே! அதுதான் நிற்க, நின்முகம் நோக்கிக் கூற்றம்
வந்ததே அன்றோ அஞ்சாது ஆர் அதன்வலிமை தீர்ப்பார்

என்ற அங்கதன் புலம்பலில், கம்பர், வாலியின் இசைமை பற்றி யெழும் பெருமிதத்தையும், கொடை வீரத்தினையும் ஒன்றின் ஒன்று சிறந்து விளங்கும்படி காட்டி வாலியை எண்ணார் வழுத்துந்திறல் கொண்ட சான்றாண்மை வீரனாக எழிலுறக் கணித்துள்ளது வியப்பளிப்பதாகும்.

ஈசனைப் பூசனை செய்தவாலியின் மகனாகிய அங்கதனின்வீரம் வாலியின் பெரு வீரத்திற்கு முன் ஒளிர இடமில்லை யாயினும், வாலியை ஒத்தவீரன் அங்கதன் என்பதைக் கம்பர் வெகு நளினமாக அவனது நீறுபூத்த வீரக் கனலை விளங்க வைத்துள்ளார். அங்கதன் கொன்பாவு திறல் கொண்ட எழில் கொண்மொய்ம்பினன் : அஞ்சாமல் மிகு ஆண்மையொடு போர்ப் பகைவருடன் வீர முழக்கம் புரிந்து அருஞ்சமர் செய்து, மறந்தரு பிறந்தலை தனில், தெவ்வரை அழிப்பவன் ; தம் முயிர்க்குறுதி யெண்ணாது, ஐயிரு மெய்ச் சிரமுடைய இராவணன் வெகுளுமாறு, சுழற் கணை கடுப்ப, வெந்திறலுடன் நேர்மையும் நீதியும் விடாது நின்றுரைக்கும் வாழ்வு கொண்ட புகழ் வீரதீரன் அங்கதனின் அடலாண்மையும் மதி நுண்மையும், பெருமிதத்தைப் புலப் படுத்தும் உட்கோளினைக் கொண்டு இசைமையாகிய புகழினைக் கம்பர் நுண்ணறிவால் விளங்கக் காட்டியுள்ளது போற்றத் தக்கது.

# தமிழ் எழுத்தும் தேவநாகரி எழுத்தும்

புலவர் பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர் பொறுப்பு,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

"தமிழ் உள்பட இந்தியாவில் பேசப்படும் எல்லா மொழிகளையும் இந்தி மொழிக்கு உரிய எழுத்துக்களின் வரிவடிவமாகிய தேவநாகரி லிபியால் எழுதவேண்டும்" என்னும் கருத்து இந்தி மொழிமீது எல்லையில்லாத பேரார்வம் கொண்டோரால் அடிக்கடி கூறப்படுகிறது. அண்மைக் காலத்தில் விநோபாபவே அவர்களும் பிறரும் இக்கருத்தை வலியுறுத்திக் கூறியுள்ளனர். முதலில் இந்தக் கருத்து எதற்காகக் கூறப்படுகிறது என்பதையும், அடுத்து இந்தக் காரணங்கள் சரியானவையா என்பதையும் பார்ப்போம்

"ஒரு மொழியைக் கற்ற அறிஞர்கள் பிறமொழிகளைக் கற்க விரும்பும் போது ஒவ்வொரு மொழிக்கும் தனித்தனி வரிவடிவம் இருப்பதால் பெருந்தொல்லை ஏற்படுகிறது. ஐரோப்பா கண்டத்தில் பல மொழிகள் பேசப்பட்டாலும் அவை அனைத்துக்கும் ஒரே வரிவடிவம் இருப்பதுபோல் இந்திய மொழிகள் அனைத்துக்கும் ஒரே வரிவடிவத்தை ஏற்படுத்திவிட்டால் ஓர் இந்திய மொழியைக் கற்றோர் இந்தியாவில் பேசப்படும் பிறமொழிகளையும் எளிதாகக் கற்கலாம். அவ்வாறு செய்வதால் இந்தியாவின் ஒற்றுமை வலுப்படும்" என்பதுதான் அவர்கள் கூறும் காரணம். மேலோட்டமாகப் பார்க்கிறபோது மிக நல்லதாகத் தோன்றும் இக்கருத்து. ஆழ்ந்து பார்க்கிறபோது ஆயிரம் தீமைகளை விளைவிக்கக் கூடியது என்பது புலனாகும்.

தமிழ் நாட்டில் தமிழ் மட்டுமே படிப்போரும், தமிழோடு ஆங்கிலத்தைப் படிப்போருமே பெரும்பாலோர் ஆவர். பிற இந்திய மொழிகளைப் படிக்கும் தமிழர் ஆயிரத்துக்கு ஒருவர் அல்லது இருவரே இருப்பர். தமிழ் மட்டும் படிப்போர் தமிழோடு ஆங்கிலத்தையும் படிப்போர் ஆகிய இரு சாராரும் தேவநாகரி எழுத்தைத் தெரிந்து கொள்ளத் தேவையில்லை. இந்திய மொழிகள் எல்லாவற்றையும் தேவநாகரி எழுத்தால் எழுதுவதால் உண்மையிலேயே ஏதேனும் பயனிருக்குமானால் அப்பயன் ஆயிரம் பேருக்கு ஒருவராக இருக்கின்ற — பிற இந்திய மொழிகளைப் படிக்கின்ற சிலருக்கே கிடைக்கும் ஒரு

வருக்குப் பயனிருக்கும் என்பதற்காக ஆயிரம் பேர் தேவநாகரி எழுத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று வற்புறுத்துவது சரிதானு?

விரல் விட்டு எண்ணக் கூடிய சிலபேர் வெளி நாடுகளிலும் வெளி மாநிலங்களிலும் சென்று வேலைபார்ப்பதற்கும் மேற்படிப்புப் படிப்பதற்கும் துணைசெய்யும் வகையில் கோடிக்கணக்கான தமிழர்கள் தங்கள் தாய்மொழியாகிய தமிழில் கல்வி கற்காது ஆங்கிலத்தின் வாயிலாகவே கல்வி கற்கவேண்டும். தமிழ் நாட்டில் ஆங்கிலமே பயிற்று மொழியாக இருக்கவேண்டும் என்று கூறுவது எவ்வளவு தவருன கருத்தோ அதைவிடத் தவருன கருத்து தேவநாகரியால் இந்திய மொழிகள் எல்லாவற்றையும் எழுதவேண்டும் என்பது.

தேவநாகரியால் உண்மையிலேயே இந்தியாவில் உள்ள எல்லா மொழி எழுத்துக்களையும் எழுத இயலுமா? இயலாது: இயலவே இயலாது தமிழில் உள்ள ற ன ழ ஆகிய மெய்யெழுத்துக்களும், எ ஒ என்னும் உயிரெழுத்துக்களும் தேவநாகரியில் இல்லை ஆகவே, எ ஒ என்னும் இரண்டு உயிரும் பதினெட்டு மெய்யுடனும் கூடிப பிறந்த 36 உயிர்மெய்யெழுத்தும் எ. ஒ என்னும் இரண்டுயிரும் அல்லாத ஏனைய பத்து உயிர் எழுத்தும் ற ன ழ என்னும் மூன்று மெய்யுடனும் கூடிப் பிறந்த 30 உயிர் மெய் யெழுத்தும் (3 மெய் + 2 உயிர் + (36 + 30 உயிர் மெய் = 66 உயிர்மெய்) = 71 எழுத்து) ஆகிய எழுத்துக்களைத் தேவநாகரியால் எழுத முடியாது மறம் என்பதை மரம் என்றும், கறந்தான் என்பதைக் கரந்தான் என்றும், வாழ் என்பதை வால் என்றும் அழகு என்பதை அலகு என்றும் கானம் என்பதைக் காணம் என்றும், எடு என்பதை ஏடு என்றும். பெட்டை என்பதைப் பேட்டை என்றும், ஒடு என்பதை ஓடு என்றும் தொல்காப்பியம் என்பதைத் தோல்காப்பியம் என்றும் தாம் தேவநாகரியால் எழுதமுடியும்.

தமிழ் மொழிக்கே உரிய சிறப்பெழுத்துக்களைப் போல் பிற இந்திய மொழிகளில் எத்துணைச் சிறப்பெழுத்துக்கள் உண்டோ யாமறியோம். அச் சிறப்பெழுத்துக்களை எல்லாம் தேவநாகரியில் கடன் வாங்கிக் கொள்ளலாம் என்ருல் தேவநாகரியில் இன்னும் நூற்றுக்கணக்கான வரிவடிவங்களைச் சேர்க்க வேண்டியிருக்கும் தமிழர்கள் தமக்குரிய அழகிய தமிழ் எழுத்துக்களை மறந்துவிட்டு ஏராளமான எண்ணிக்கைகொண்ட தேவநாகரி எழுத்துக்களைக் கற்க வேண்டுவது தேவைதானு? கற்பதுதான் எளிதாக நடக்கக்கூடிய செயலா?

மொழி என்னும் கட்டிடத்திற்கு எழுத்துக்களின் வரிவடிவம் என்பது அடித்தளம் போன்றது. அடித்தளம் அழிக்கப்பட்டால் கட்டிடம் அழிவது போல ஒரு மொழியின் வரிவடிவம் அழிந்தால் அந்த மொழி நாளடைவில் அழியும். வரிவடிவில் எழுதப்பெருத எத்தனையோ மொழிகள் நாடோறும் உருமாறித்தேய்ந்து அழிந்தன என்பதை மொழிகளின் வரலாறு அறிந்தோர் நன்குணர்வர். தமிழர்கள் தேவநாகரி எழுத்தை ஏற்றுக்கொண்டால் நாளடைவில் அழகிய தமிழ் எழுத்துக்களை மறப்பர். இப்பொழுது அச்சிடப்பட்டுள்ள தமிழ் நூல்கள் அனைத்தும் தமிழ் எழுத்துக்களை அறிவார் இல்லாத காரணத்தால் அடியோடு அழிந்துபோகும். சிறிது சிறிதாகத் தமிழே அழியும

இந்திய மொழிகளுக்குள்ளேயே அழகிய வரிவடிவத்தைப் பெற்றது தமிழ். கையை எடுக்காமலேயே விரைவாகத் தமிழை எழுதுவது போல இந்தி எழுத்துக்களை எழுத முடியாது. தமிழ் எழுத்தைப்போல் நாம் அழகாக இல்லையே என்று எண்ணி வருந்தித் தூக்குப் போட்டுக்கொண்டு தொங்குவது போல் இந்திமொழி எழுத்துக்கள் ஒரு நேர் கோட்டிலிருந்து தோங்கிக்கொண்டு காட்சி தருகின்றன.

ஒருமொழியைப் படிக்க ஓர் ஆண்டு ஆகுமென்றால் அந்த மொழியின் வரிவடிவத்தைப் படிக்க ஒருவாரம் போதும். ஒரு மொழியின் இலக்கணததையும், சொற்களையும், இலக்கியங்களையும் படிக்கவும் புரிந்து கொள்ளவும்தான் நாளாகுமே தவிர எழுத்துக்களின் வரிவடிவத்தைப் புரிந்து கொள்ள நாளாகாது. எழுத்துக்களைப் படிக்கவே முடியாதவர்கள் ஒரு மொழியின் இலக்கண இலக்கியங்களைக் கற்பது எப்படி முடியும்? எனவே, பிற மொழிகளைக் கற்பதற்குத் துணைசெய்யும் என்று கருதித் தேவநாகரி எழுத்தை ஏற்றுக்கொள்வது ஆக்கம் கருதி முதலிழக்கும் செயலாகும். அதனை அறிவுடைய தமிழர் செய்யார்.

சிற்றூர்களில் ஐந்தாம் வகுப்பு ஆறும் வகுப்புக்களில் படிக்கும் சிறுவர்கள் ஆங்கில எழுத்துக்களை முதன்முதலாகத் தெரிந்துகொள்ளும்போது A, B, C, D என்னும் ஆங்கில எழுத்துக்களுக்கு மேலே தமிழில் ஏ. பி. சி. டி என்று எழுதி வைத்துக்கொண்டு படிப்பர். Ebility என்னும் சொல்லுக்குமேல் எபிலிட்டி என்று எழுதிக்கொள்வர் இப்படிப் படித்தல் ஒழுங்காக ஆங்கிலத்தைப் படிக்க முடியாது என்பதை ஆங்கிலம் அறிந்தவர் யாவரும் உணர்வர். I can not do that என்பதை ஐ கேன் நாட்டு தட் என்று தமிழில் எழுதிப் படிப்பது நகைப்

பதற்குரிய செயலாகும். அதுபோலவே தமிழ்ச் சொற்களைத் தேவநாகரி எழுத்துக்களால் எழுதிப் படிப்பதும் நகைப்பை உண்டாக்கும்.

ஐரோப்பா கண்டத்தில் உள்ள எல்லா மொழிகளுக்கும் ஓரே வரிவடிவம் உண்டு. அதனாலேயே ஒரு மொழி தெரிந்தவர் இன்னொரு மொழியையும் தெரிந்துகொள்ள முடியாது. ஆங்கிலம் அறிந்தவருக்குப் பிரெஞ்சு மொழி தெரியாது பிரெஞ்சு தெரிந்தவருககுச் செருமானிய மொழி தெரியாது. ஒரே வரிவடிவத்தை வெவ்வேறு மொழியினர் வெவ்வேறு வகையில் ஒலிப்பர் என்னும் உண்மையையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

தேவநாகரியால் இந்திய ஒற்றுமை வளரும் என்பதும் பொய்யே. இந்தி மொழி மட்டும் இந்தியாவின் ஆட்சிமொழி என்று அறிவித்தபோது எவ்வளவு போராட்டங்களும் பிரிவினை உணர்ச்சியும் தோன்றினவோ அதை விடவும் மிகுதியான பிரிவினை உணர்ச்சியே தேவநாகரி எழுத்தை இந்திய மொழிகளுக்கெல்லாம் பொது எழுத்து வடிவமாக ஆக்குவதால் தோன்றும்.

இதுகாறும் கூறியவற்றுல் இந்திய மொழிகளை எல்லாம் இந்திமொழி எழுத்துக்களால் எழுத முடியாது என்பதும், அதனுல் தமிழுக்கும் தமிழருக்கும், இந்தி அல்லாத பிற இந்திய மொழிகளுக்கும் பெருங்கேடு விளையும் என்பதும், ஆகவே. தேவநாகரி எழுத்துக்களை இந்திய மொழிகளை எல்லாம் எழுதப் பயன்படுத்தும் பொது எழுத்துக்களாக ஏற்றுக் கொள்ள முடியாது என்பதும், விளங்கும்.

---

( பொழிலன்பர்கள் சுவைக்க )

## பெரியவை மூன்று

1. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.
2. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது.
3. நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

( திருக்குறள் )

“ காவலன் மண்ணின் கடலின் மலையில் பெரிதென் என
எண்ணி எழுதிக் கொடுத்த ஏற்றக்கை ”

( கம்பர் )

## பாயிரத்திலக்கணம் பகரும்

# கேட்போர் என்பதன் மெய்யுரை

( நக்கீரன் வழியடிமை. வித்துவான்.
பி. மா. சோமசுந்தர முதலியார், இராணிப்பேட்டை, )

### க. முன்னுரை

“காய்த லுவத்த லகற்றி யொருபொருட்கண்
ஆய்த லறிவுடையார் கண்ணதே — காய்வதன்கண்
உற்றகுணந் தோன்றாது தாகு முவப்பதன்கண்
குற்றமுந் தோன்றாக் கெடும்.”

என்று ஆசிரியர் முனைப்பாடியார் அறிவுறுத்திய அறநெறி. தமிழாய்விற் புகுந்தாளாளர் இன்றியமையாதெனத் தழுவிக் கோடற்காம் தகைமைத்து ஆம். இது நோக்கியே. செந்நாப் போதாரும்,

“சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி.”

என்று அருளிச் செய்வாராயினர். இதனானே. நடுவுநிலைமையே நற்றமிழ் வல்ல நல்லோர்க்கு அணியாம் நலத்ததென்பது பெறப்படும்.

நூல் இயற்றப் புக்கார், “தாஅ னாட்டித் தனாது நிறுப்பு” என்னும் மதத்தையே கடைப்பிடியாக்கொண்டு மரபு நிலை வழுவியுரைத்தலும் உண்டு. அயன்மொழி வழக்கினைத் தமிழ் மொழியிற் புணர்த்த முயறலும் உண்டு. இன்னணம் முயல்வார் தம் அயன்மொழிப் புலமை கண்டு அனைத்துலகும் ஏத்தல் வேண்டும் என்னும் இச்சை மீதூரப்பெற்றுத் தம் செயலான் தமிழ் மொழிக்குறும் ஆக்கத்தையும், அழிவையுங் கருதார். வீரசோழியமும் பிரயோக விவேகமுங் கண்டார்க்கு இக்கூற்றின் உண்மை புலனாமென்க. இவர் செயலால் இன்றமிழ் எய்தும் ஆக்கத்தினும் கேடே பெருக்க முடைத்தென்க. என்னை ?

‘ அன்றியுந் தமிழ்நூற் களவிலை யவற்று
ளொன்றே யாயினுந் தனித்தமி ழுண்டோ
வன்றியு மைந்தெழுந் தாலொரு பாடையென்
றறையவே நாணுவ ரறிவுடை யோரே ”

என்று இலக்கணக் கொத்து நெறியிகந்து இசைப்பதே இன்றமிழ்க்கு எய்திய இழிவையுங் கேட்டையும் எடுத்துரைக்கும்.

தன்னிகரற்ற தமிழ் மொழியின் மாட்சி நிறுவுவான்புக்கு, திராவிடப் பிரகாசிகை என்ற நூல் செய்தார் பிரயோக விவேக நூலாரையும், இலக்கண விளக்க நூலாரையும், வீரசோழியப் பதிப்புரைகாரரையும் மறுத்தல் சால அழகிதே. வீரசோழியப் பதிப்புரைகாரரைத் "தீயூழ் வசத்தாற் றம்மத மறுத்துப் பிறடி தந்தழுவிப் பழிபூண்ட தம் வரலாறு வாய் சோர்ந்து புலம்பி "யானு மறியேனவளும் பொய் சொல்லாள்' என்பதை விளக்கியிட்டன ரென்றுணர்க" என்று இழித்துரையாடியும் உள்ளார். அவ்வுழி, இலக்கணக்கொத்து ஆசிரியர் பற்றி யாதொன்றும் இயம்பினரல்லர் இவரும் 'ஐந்தொழுத்தா லொரு பாடையென்றறையவே நாணும் அறிவுடையார்' குழுவினர் கொல்லோ? மற்று யாது காரணங் கொல்லோ இயம்பாமைக்கு? அறிகிலம். இஃதொன்றே அற நெறிச் சாரக் கூற்றின் வன்மைக்குத் தகு சான்றாகும்

## உ சிவஞான முனிவர் உரை

சிறப்புப் பாயிரத்திலக்கணத்தை,

"ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோ டாயெண் பொருளும்
வாயப்பக் காட்டல் பாயிரத் தியல்பே"

என்று வகுக்கும் இந்நூற்பா களவியலுரையில் கண்டது. ஏனைய ஆசிரியன்மாரும் இதனைத் தம் நூலில் பெய்துகொண்டு உரைத்தனர். இதன் கண்ணுறும் 'கேட்போர்' என்ற சொற்கு மாதவச் சிவஞானயோகிகள், "இவையாய்ந் தோரிது கேட்டற்குரிய ரென்னுங்கேட்போரும்" என்று தொல்காப்பியச் சூத்திர விருத்தியினும். "அவையாய்ந் தோரிது கேட்டற்குரியரென்னும் கேட்போரும்" என்று நன்னூல் விருத்தியினும் உரையருளிச் செய்துள்ளாரால், அன்றியும்,

"இக்கருத்தறியாத உரையாசிரியரை உள்ளிட்டோ ரெல்லாரும் நூல் அரங்கேறும் அவைகளத்துக் கேட்டாரைக் கேட்போரென்றும், தொகுத்தன் முதலிய வழியின் வகையினை யாப்பென்றும் கூறினர் ஆக்கியோன் பெயர், நுதலிய பொருள் என்பன போல இறந்த காலத்தாற் கூறுது கேட்போரென எதிர்காலத்தாற் கூறியதே அஃது உரையன்மைக்குச் சான்றாகலானும், காலம் களத்துள் அடங்குதலின் வேறு கூற வேண்டாமையானும், ஆக்கியோன் பெயர் முதலியனபோல

நூல் வழங்குங் காலத்து நிகழ்வதன்றாகலின் அவற்றோடு ஒருங்குவைத்து எண்ணல் பொருந்தாமையானும், கேட்டற்குரிய அதிகாரிகளாவாரை ஒரு தலையாக உணர்த்தல் வேண்டுமாகலானும், தொகுத்தல் முதலியன வழியுள் அடங்குதலானும், இயைபும் ஒரு தலையான் உணர்தற் பாலதாகலானும் யாம் கூறியதே வட நூலார்க்கும் உடன் பாடாகலானும், அவர் உரை போலியுரை என்க.

என்று ஏனையருரைகளை மறுத்தருளியும் உள்ளார்."

## ந. நக்கீரனுர் உரை

"கேட்போர் என்பது இன்னுர் கேட்டார் என்பது யாப்பு என்பது நூல் யாப்பு. நூல் யாக்குமிடத்து நான்கு வகையால் யாக்கப்படும். தொகுத்தும், விரித்தும் தொகை விரியாகவும், மொழி பெயர்த்தும் என" என்று உரை கூறினுர் மதுரைக் கணக்காயனுர் மகனுர் நக்கீரனுரேயாகவும், அவர் வழி நின்றே பிற்றைநாள் உரையாசிரியன்மார் உரைத்தாராகவும், சிவஞான முனிவர், உரை முதல்வராய நக்கீரனுரை யொழித்து "இக்கருத்தறியாத உரையாசிரியரை யுளளிட்டோரெல்லாரும்" என்று ஏனைய உரையாசிரியன்மாரையே மறுத்துரைக்கப்புக்கதும் என் கொலோ? ஐம்முகச் சிவமாகவும் அறுமுகச் சிவமாகவும் விளங்கும் அம்மையப்பரின் திருவருள் தடங்கடலில் திளைக்கும், திருவினரும், வரலாறு வழுத்துமாறு சந்தனப் பொதியத் தடவரைச் செந்தமிழ்ப் பரமாசிரியன்பால் தண்டமிழ் உணர்ந்த தக்காரும், தோலா நாவினருமாய்ப் பொலிதரும் நக்கீரனுர் தம் தோற்றங்கண்டு நடுங்கியோ மற்றியாதோ அறிகிலம்.

அற்றன்று திராவிடப்பிரகாசிகை நூலார்.

"அவ்வுரை இறையனுர் களவியல் முகத்துக் கணக்காயனுர் மகனுர் நக்கீரனுருரைத்த பொருளாகலினெனின், — அவ்வுரை இறையனுர் களவியல் முகத்து நக்கீரனுர் கண்ட பொருளென்பது சிவஞான யோகிகள் அறியாதாரல்லர் பொருந்துமாற்றிற்கு ஏலாமையானும், வட நூல் மாருகலானும், அவை முக்குண மயக்கால் முறை மறந்துரைத்த பொருளென்று மறுத்து, ஆசிரியர் கருத்தறிந்து உண்மைப் பொருள் கூறினுராகலின் அது பொருத்தமுடைத்தாகாமை யாண்டையதென்க. அவ்வுரை மாட்சி தொல்காப்பியப்பாயிர விருத்தியுட்காண்க. ஈண்டுக் காட்டலுறின் விரியுமென்பது"

என்று மறுத்தாராலோவெனின், சோறும். இவர் இவ்வாறு நக்கீரனுர்க்கு முக்குண மயக்காம் இழிபேற்றியதுமன்றி,

"நக்கீரனார் மெய்யுணர்வில் முற்றுப் பேறுடையராய்க் களவியற் பொருள்கண்டாரென்பாரை, அவ்வாறு மெய்யுணர்வுடையராயினார் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் உத்திரவேதம் வித்தகமுறச் செய்துகொண்டு சங்கமேவிய ஞான்று அவரோடு சங்கப் பலகை யொக்க வீற்றிருக்கப் பெறாது இழிந்த தென்னையோ வென்று கடாவி மறுக்க"

என்று பாட்டிக் கதையொன்றையுந் துணையாய்க் கூட்டிக் கொண்டார் நம்பனை மறுத்தவர் நக்கீரர்; அவரையே மறுத்தவர் சிவஞானமுனிவர் என்று உயர்த்திக் கோடற்கு இவ்வண்ணம் வரைந்து வைத்தார் போலும். எத்துணைப் பேராசை! எத்துணைப் பேராசை!! நக்கீரனார் மாட்டு இவர்கண்ட வடுவாய்மைப் பாலதேல், சிவஞானமுனிவர் அவரை மருத தென்னை? களவியலுரையில் பாயிரம் கழற்றப்பட்டுள்ளது என்பதை மறந்தாரா? அன்றெனின், சிவஞானமுனிவர் கருத்துவேறு என்பதும் அதனையுணராது அவரோடு முரண்பட்டுத் திராவிடப் பிரகாசிகையார் உரைத்தாராதல் வேண்டும் என்பதும் கொள்ளநேரும்

திராவிடப் பிரகாசிகையின் உரை வரலாற்றுணர்வின்றி வரையப்பட்டதால் வரலாற்றோடும் ஆய்வோடும் முரண்படுவ தென்பதும், வாய்மையின் வழிஇயது என்பதும் இக்கட்டுரைக் கண் 'கேட்போர்' என்னும் பகுதியில் நிறுவுவாம். நடுவு நிலைமையின் நின்று இந்நூலாசிரியர் உரைத்திடாமை 'ஐந் தெழுத்தா லொரு பாடை' என்றாரைக் குறியாதொழிந்ததே கூறி நிற்குமென்க. இந்நீர்மை இவர் சார்ந்த மடம் பற்றி விளைந்ததாகலின், இவர் மறுப்புரையும் மயக்கவுரையாயே மன்னும் என்பதறிக.

## ச திகட சக்கரம்

திராவிடப் பிரகாசிகையார் தம் சார்பினரல்லாரை மறுத்தல் வேண்டும் என்னும் காழ்ப்புக்கொண்டு மறுப்பரேயன்றி, உண்மை கண்டு உலகுக்கு உணர்த்தல் வேண்டுமென்னும் உயர் நோக்கானன்று என்பதை ஒரு சான்று கொடு நாட்டுதும்

'கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை' என்னுந் தொன்மைக் கூற்றுக்கு இணங்க கந்தபுராணத்து முதற் செய்யுட் கண்வரும் 'திகட சக்கரம்' குற்றமில்புணர்ச்சியே எனக் காட்டவும் இவர் ஆசைப்பட்டார். ழகரத்தின் முன்வரும் தகரம் டகரமாய்த் திரியும் என்று வீரசோழியத்துறும் விதி குற்றப்படுவது எனக் காட்டாவும் ஆசைப்பட்டார். கந்தபுராணத்துறும் 'திகட சக்கரம்' என்னுஞ் சொல்லமைதி பற்றி.

"அரங்கேற்றுழித் 'திகடசக்கர' மென்னுந் தலைச் செய்யுள் முதற்கண்ணதான 'திகழ்' என்னுஞ் சொல்லிறுதி ழகரந் தகரவல்லெழுத்தின்முன் டகரமாய்த் திரிந்ததற்கு விதி தொல்காப்பியத்தில் இல்லையென்று அவ்வரங்கிலுள்ள புலவ ரொருவர் தடை நிகழ்த்தினரென்றும், கச்சியப்பசிவாசாரி யார் 'இத்தடை நியாயமாயினுங் குமரகோட்டத்தடிகள் அவவாறு எடுத்தருளிச் செய்ய நாம் முதற்கொண்டு பாடின மாகலின் இதன்கண் குற்றமாராய்தல் முறையன்று' என்று விடை நிகழ்த்தினரென்றுஞ் சிலர் கூறுப. ஆண்டு ழகரந் தகரத்தின் முன் டகரமாய்த் திரிந்தது 'விகடசக்கரன்' என்னும் எதுகை நோக்கியாகலின், அது தொல்காப்பிய விதியாமன்றி விரோதமாகாதென்க. இன்னோரன்ன செய் யுட் டிரிபுகள் "கிளந்தவல்ல செய்யுளுட்டிரிநவும்" என் னும் அதிகாரப் புறனடையால் அமைத்துக் கோடற்பாலன வென்க"

என்றுரைத்தார். அதிகாரப் புறனடையென்ற அமைதி ஏற்புடைத் தாகாது. என்னை? குற்றந் தங்கிய செய்யுள் செய்தாரும் புறனடையால் அமைத்துக் கொள்க என்று கூறல் கூடுமாகலின். 'திகடசக்கரம்' என்பது குமரகோட்டத்தடிகள் அருளிச்செய்தத்ாகலின் பின்னுறு எதுகை நோக்கித் திரிந்ததென்பது சாலாது. என்னை? இது கொண்டே நூலாசிரியர் ஏனைய அடிகளின் எதுகையினை அமைத்தாரா கலின். இறைவன் திருமொழியெனல் எமக்கு இசைவின்றெனில் புறனடை என்ற அமைதி பொருந்தாமை கூறி மறுக்க. புறனடை என்னும் அமைதி கந்தபுராண ஆசிரியருக்கும், வீரசோழியத்து விதி என்று கதை கட்டினருக்கும் தெரியாத தென்னையோ என்று வினவுக.

இவர் புறனடையான் அமைதி கண்டது 'கந்தபுராணம்' அரங்கேற்றுழித் 'திகட சக்கரம் என்னும் புணர்ச்சி முடிபிற்கு விதி இந்நூல் கொண்டு காட்டினர்' என்ற வீரசோழியப் பதிப்புரைகாரரை மறுத்தற்கேயன்றிப் பிறிதன்று. இவர் மறுப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தாரும் இக்கதையைக் குறிக்கின்றனர். வீரசோழிய முன்னைள் பதிப்புரைகாரரை மறுத்த இவர் வித்தியாநுபாலன யந்திரசாலையின் வெளியீடாகிய கந்தபுரா ணத்துள் இக்கதையை மிக விரித்தெழுதிய பெரியாரைப்பற்றி யாதுங் கூறாது சென்றதே இவர் பக்கம் பற்றி யொழுகுபவர் என்பதைப் பறை சாற்றும்.

(தொடரும்)